# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆவணி 1981 ★ இதழ் - 68


## குளப்பொருக்கு


தமிழகத்து வானொலி நிலையங்கள் அடிக்கடி தங்கள் நாட்டகத்து விவசாயிகளுக்குக் குளப்பொருக்கின் மகிமையைப் பற்றி ஒலிபரப்பிவருகின்றன. வயல்களுக்கு நாம் இடுகின்ற பலவிதமான பசளைகள் உரங்களுள் குளப்பொருக்கு மிகவும் உயர்ந்த தரமுள்ளது என்று அநுபவசாலிகளும், ஆராய்ச்சி வல்லுநரும் நன்கு கண்டறிந்து முடிந்த முடிபாகக் கூறியுள்ளார்கள். கோயம்புத்தூர் விவசாயப் பேராசிரியர்கள் ஆராய்ச்சி அநுபவம் நிறைந்தவர்கள். குளப்பொருக்கினால் அதிக விளைவுண்டாவதை மாநிலமெங்கும் கண்டவர்கள். எந்த மண்ணையும் வளம் பெருக்கச் செய்வதில் குளப்பொருக்கு நிகரில்லாதது.

ஈழக்கு நாடுகளின் தானியக் களஞ்சியம் என்னும் இலங்கையின் நெல்விளைவு புகழ் பெற்றிருந்தது இலங்கையின் வரண்ட பிரதேசங்கள் எங்கும் ஆயிரக்கணக்கான குளங்கள் பரந்துபட்ட வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதற்குப் பயன் தந்தன. கோடை காலத்தில் வற்றி வரண்டு போகும் குளங்களின் வரண்ட பொருக்கு வண்டல் மண்ணைப் போன்று பசளையாய்ப் பயன் தந்தது

ஏற்றுமதி மூலமும் இறக்குமதி மூலமும் தீர்வை விதித்துச் சுவைகண்ட ஆங்கிலேயர் விவசாயத்துறையினைப் புறக்கணித்ததோடு, குளத்துப் பொருக்கு எடுப்பதையும் தடுத்தனர். அவர்களின் தடையுத்தரவுகளால் நம்மவர் குளத்தை மறந்தனர். மழைநீரை விரைவிற் கடலிற் புகச் செய்தனர்.

மாவட்ட அபிவிருத்தி செய்யப்போகும் நேயர்கள் குளங்களை வளஞ்செய்யுங்கள். குளந்தொட்டு வளம் பெருக்கிய நாகரிகம் தமிழ் நாகரிகம். யாழ்ப்பாணத்து நல்லதமிழ் நாகரிகம் எந்த ஆற்றையும் அண்டியதல்ல. அது குளத்தங்கரை நாகரிகம். குளங்கள் ஆழமாவதற்கும் அதிக மழைநீர் தேங்கி நிற்பதற்கும் வசதிவாய்ப்புச் செய்யும் முகமாக முதலில் குளப்பொருக்கை எடுத்து

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)



கிளிநொச்சியில் பிரதிட்டை செய்யப்பெற்ற சர்வசக்தி பீடத்துக் கும்பாபிஷேகத்தின்போது, மில்க்வைற் தொழிலதிபர் குருகுல நிர்வாகி அப்பு கதிரவேலு அவர்களிடம் ஆயிரக்கணக்கான அபிராமி அந்தாதி நூலை அன்பளிப்புச் செய்தார்.

எங்கள் உள்ளம் இறைவனுக்குச் சிங்காதனம்

உ
சிவமயம்



## கடவுள் வணக்கம்

### திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

திருவலஞ்சுழி — திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

ஓத மார்கட லின்விட முண்டவன்
பூத நாயகன் பொற்கயி லைக்கிறை
மாதோர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாத மேத்தப் பறையுநம் பாவமே.

திருச்சிற்றம்பலம்

நீர்ப்பெருக்குப் பொருந்திய திருப்பாற் கடலில் எழுந்த ஆலகால விடத்தை உண்டருள் செய்தவரும், பூதங்களுக்கு நாயகனும், பொன்மயமாய திருக்கயிலைக்கு இறைவனும் உமாதேவியாரைப் பாகத்திற் கொண்டவரு மாகிய திருவலஞ்சுழி வாணனைத் திருவடி ஏத்தித்தொழு தால் நம் பாவங்கள் நீங்கும்.




### கயமை

நற்குணமில்லாத கீழோரது தன்மை

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறை பிறர்க்கு உய்த்துரைக்க லான்.

தாங்கள் கேட்ட மறைவுகளைத் தாங்கிக்கொண்டு சென்று எல்லார்க்குஞ் சொல்லுதலால், கயவர் அடிக்கப் படும் பறையைப் போல்வர்.

### MEANNESS

The mean are like the drum that is beaten, for they hear secrets and betray them.

### பகவத் கீதை

தத்தம் கடமைகளைச் சரியாகச் செய்பவர் தருமஞ் செய்தவராவர். கீர்த்தியுடையராவர். அவர்களுக்குப் பொன்னுலக வாயில் திறந்திருக்கும்.

பெரியவர்களால் நன்கு மதிக்கப்பெறாதவர் சிறுமையடைவர்.

கடமையில் தவறாதவருக்கு இன்பம், வெற்றி, பேறு என்பனவால் மகிழ்ச்சியும்; துன்பம், இழவு, தோல்வி என்பனவால் துயரமும் இல்லை.

## ஆகஸ்ட் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 3. | திங்கள் | — | ஆடிப் பூரம் |
| 5. | புதன் | — | நல்லூர்க் கந்தன் கொடி |
| 7. | வெள்ளி | — | சுந்தரமூர்த்திநாயனார்குருபூசை |
| 11. | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 13. | வியாழன் | — | பிரதோஷ விரதம் |
| 14. | வெள்ளி | — | நல்லூர் மஞ்சம்<br>வரலட்சுமி விரதம் |
| 15. | சனி | — | பூரணை விரதம் |
| 17. | திங்கள் | — | முன்னேஸ்வரம் கொடி |
| 22. | சனி | — | நல்லூர் கார்த்திகைத் திருவிழா |
| 25. | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 27. | வியாழன் | — | பிரதோஷ விரதம் |
| | | — | நல்லூர் சப்பரத் திருவிழா |
| 28. | வெள்ளி | — | நல்லூர் தேர்த்திருவிழா |
| 29. | சனி | — | நல்லூர் தீர்த்தம்<br>செல்வச்சந்நிதி கொடி<br>அமாவாசை விரதம் |
| 30. | ஞாயிறு | — | நல்லூர் பூங்காவனத் திருவிழா |

### தார்மிக அரசு

இராமராச்சியத்தின் பின், தர்மபுத்திரர் ஆட்சியின் பின் தர்மப்பாதை அமைத்தவர் அசோகர். இரத்தவெறி பிடித்துப் பல்லாயிரம் உயிர்களைப் போக்கி ஊர்களைச் சுட்டுப்பொசுக்கிய பின்தான் அசோகருக்கு ஞானம் உண்டானது. அறவழியமைத்துத் தர்மசக்கரத்தை உருளச் செய்த அவரைத் தர்ம அசோகர், தேவப்பிரியர், பிரியதர்சி என்றெல்லாம் கதைகள் கூறுகின்றன. அவர் தம் செல்வப் புதல்வி சாருமதி என்பாள் நேபாளத்திலே பென்னம்பெரிய ஆலயம் அமைத்து அங்கே விநாயகப் பெருமானைப் பிரதிஷ்டை செய்தவள். அவளின் தெய்விக வாழ்வைக் கண்டு தலைவணங்கிய தந்தை அசோகர் அவளைக்கொண்டு தர்மப் பிரசாரஞ் செய்விக்கக் கருதினார். முதலில் தம் மைந்தர் மகிந்தனைக் கொண்டு இலங்கையில் தர்மப் பிரசாரஞ் செய்வித்த அவர், மகிந்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

★ வழிபடத் தெரிந்தவன் வீண்காலம் போக்குவதில்லை ★



# நல்லூர் முருகன் திருவிழா

ஆடியமாவாசை சைவசமயத்தவர்களுக்குப் புனிதமான நாள். நீத்தார் எனப்படும் பிதுரராகிய நம் மூதாதையரை நினைந்து அன்று தீர்த்தமாடிக் கடமைகள் செய்து விருந்துகொடுத்து மனத்தையும் உடம்பையும் சுற்றாடலையும் சுத்தமாக்கிக்கொள்கிறோம். அடுத்துவரும் ஆறாம் நாள் நல்லூர்க் கந்தசாமி கோயில் திருவிழா ஆரம்பிக்கின்றது.

வடமாகாணத்தின் தலைநகரான நல்லூர் முன்னர் தென்னிலங்கைவரை புகழ் பூத்திருந்தது, ஆட்சி செய்தது. சிங்கள மன்னர்களும் நல்லூரை வெகுவாக மதித்தனர். நல்லூரில் இருதயஸ்தானமாயுள்ள கந்தசுவாமி கோயில் சரித்திரப் புகழும் புனிதமும் வாய்ந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் சிங்கள மன்னன் எனக் கருதப்படும் செண்பகப் பெருமாள் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்தான் என்றும் புதிதாகக் கட்டினான் என்றும் கருதுவர். கனக சூரியசிங்கையாரிய சக்கரவர்த்தி காலத்தையடுத்து நல்லூரைச் சூழச் சைவாலயங்கள் எழுந்தன.

கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார், தெற்கில் கைலாசநாதர், மேற்கில் வீரமாகாளி, வடக்கில் சட்டநாதர் ஆலயங்கள் எழுந்தன. செண்பகப்பெருமாள் மலையாள தேசத்துப் பணிக்கன் ஒருவனின் வீரமைந்தன். அவனே ஆறாம் புவனேகபாகு என ஜயவர்த்தன புரத்தில் அரசு செய்தவன். அவன் முருகபக்தன். அவன் பெயர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கட்டியத்திலும் இடம் பெற்றது. சிலர் அவனல்லன், கூழங்கைச் சக்கரவர்த்தியின் மந்திரியாகிய புவனேகபாகுவே நல்லூரோடு தொடர்புடையவன் என்பர்.

ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசிரியரும், புலவரும் அரசாங்கப் பெரும் உத்தியோகத்தருமான இருபாலைச் சேனாதிராய முதலியார் நல்லூர் முருகனை உபாசனா மூர்த்தியாயும் குலதெய்வமாயும் கொண்டு பல பிரபந்தங்களையும் தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேட் பெருமானார் என்பது அவர் பாடல் ஒன்றில் பயின்று வந்த அழகிய தொடர்.

ஆறுமுகநாவலர் நல்லூர்ப் பெருமானின் திருவருளால் தோன்றி அவர் பெயரையே கொண்டவர். திருக்கோயிலில் பெரிதும் ஈடுபாடுகொண்டவர். ''என்னையும் ஒரு பொருட்டாகக் கொண்டு என்னைத் தடுத்தாட்கொண்டருளிய தடங்கருணைப் பெருங்கடல்'' என்னும் கருத்தில் அவர் எழுதியிருக்கிறார். இது அவர் 1851ஆம் ஆண்டில் உரையோடு வெளியிட்ட திருமுருகாற்றுப்படையிலாகலாம்.

அந்தணரில் மேம்பட்டவரும் வேதாகமம் ஆசார சீலம் அறிந்தவருமான விளைவேலி வேதக்குட்டி ஐயர் சென்ற நூற்றாண்டிலே இத்திருக்கோயிற் கிரியைகள் செய்தவர். ஆறுமுகநாவலர் இங்கே புராணபடனஞ் செய்தவர். நாவலர் உரைநயங்கேட்பதற்கு ஆயிரக்கணக்கானோர் அயல் ஊர்களிலிருந்து ஆசாரத்தோடு வருவர். நித்திய கருமஞ் செய்து, அநுட்டானத்தின்போது ஆசமனஞ் செய்த நீர்த்துளிதவிர வேறெதனையும் உட்கொள்ளாமல் ஆறு ஏழுமைல் தூரம் நடந்துவந்த பக்தர்கள் பலர்.

நல்லூரில் திருவிழாவென்றால் நாடெங்கும் கொண்டாட்டம்; நகரம் நகரத்துக்கு மேற்பட்டுப் பொன்னமராவதியெனப் பொலிந்திருக்கும். ஊர்கள் தோறும் வழிநடையில் வருவோர்களுக்கு வெண்மணல் பரப்பிய தண்ணீர்ப்பந்தல்கள், நிழல் மண்டபங்கள், மண்டபங்கள் தோறும் கந்தபுராண படனம். நல்லூரிலும் அயலூரிலும் வாழ்வோர் அனைவரும் தாங்கள் கோயிலிலிருந்து வீட்டுக்குப்போகும் போது இரண்டு மூன்று அடியார்கள், தூரத்து அன்பர்களை அழைத்துச் சென்று அமுது படைத்தல் வழக்கம்.

## மூவிருமுகங்கள்

முருகப்பெருமான் சிவபெருமானின் ஒளிவடிவம் சக்தியும் சிவமுமாய தனிவடிவம். பரஞ்சோதிப் பிழம்பாய் நின்ற அவரே மூவிருமுகங்கள் கொண்டு உலகமுய்ய உதித்தனர்.

காலமாய்க் கால மின்றிக்
கருமமாய்க் கரும மின்றிக்
கோலமாய்க் கோல மின்றிக்
குணங்களாய்க் குணங்க ளின்றி
ஞாலமாய் ஞால மின்றி
யநாதியாய் நங்கட் கெல்லா
மூலமாய் இருந்த வள்ளல்
மூவிரு முகங்கொண் டுற்றான்.

எங்க ணும்பணி வதனங்கள்
எங்கணும் விழிகள்
எங்க ணுந்திருக் கேள்விகள்
எங்கணுங் கரங்கள்
எங்க ணுந்திருக் கழலடி
யெங்கணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயும்
அறுமுகத் திறைக்கே.


(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## நயினாதீவு சனசமூக நிலையம்

நயினாதீவு சனசமூக நிலையத்தார் நன்றியறிதல் உள்ளவர்கள். தங்கள் சூழலில் நடத்திய சைவ சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குத் தொழிலதிபர் கனகராசா அவர்கள் பெறுமதி வாய்ந்த பரிசில்களை நல்கியதையிட்டு ஊரவர் பெருமிதம் கொண்டதாக எழுதியுள்ளார்கள். தமிழுக்கும் சைவத்திற்கும் தாங்கள் என்றென்றும் பணிபுரிவதாக அவர்கள் எழுதியுள்ளார்கள்.

★ அற்பசுகங்களை அகற்றினால் பேரின்பம் உண்டாகும் ★

## ★ தொண்டு ★



தொண்டு என்பது உலக மதங்கள் எல்லாவற்றிலும் இடம்பெற்று நிறைந்து நீக்கமற நிலவுகின்ற மகத்தான சேவையாகும். இறைவனே தொண்டு செய்பவர் உள்ளத்தில் ஒடுங்கி இருப்பவர். சங்கார காரணராய இறைவன் எல்லாவற்றையும் இறுதிக்காலத்தில் ஒடுக்குபவராதலின் ஒடுங்கி எனப் பெயர் பெற்றவர். இத்தகை இறைவன் ஒடுங்குமிடம் தொண்டரின் உள்ளம் என்ருல் தொண்டு செய்பவரின் பெருமை என்னும்:

தொண்டர்க்குத் தொண்டு செய்பவர், தொண்டரின் குறை தீர்ப்பவர் பெரிய தொண்டர். தொண்டர்தம் பெருமையை முதலில் சொன்ன சுந்தரமூர்த்தி நாயனருக்கு வன் தொண்டர் என்றும் திருநாமம் வழங்குகிறது.

இன்று தொண்டுள்ளம் படைத்த இளைஞர்கள் பலர் திருக்கோயில்களை மையமாகக்கொண்டு பணிசெய்கின்ருர்கள். செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் முதலிய இடங்களில் தொண்டர்களின் பணி நனிசிறந்தது. தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவாலயத்தில் தொண்டு செய்பவர்களுக்கு அடையாளச் சால்வை அணிவித்துப் பெருமைப்படுத்திய மில்க்வைற் தொழிலதிபர், அண்மையில் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையினரின் வெள்ளிவிழா வைபவத்தின்போது தொண்டர்களை வாழ்த்தி வெண்பச்சை நிறமுள்ள அடையாளச் சால்வை அணிவித்துக் கௌரவித்தார். இம் முயற்சியில் முன்னின்று வழிப்படுத்திய மூதறிஞர் மயில்வாகனம் ஆசிரியர் திருத்தொண்டில் கரைகண்டவர். அவர் இன்று பழைய ஜனகர்போல வீட்டிலிருந்தவாறே தவக்கோலத்தில் பொலிகின்ருர். பொன்நிற மேனியுடன் பொலிந்து விளங்கும் அவரின் சேவைகள் பொன்னம்பலம் இராமநாதன் காலம் முதலாகப் பொலிந்துவந்ததாகும். அவர் இன்னும் பல்லாண்டு நம்மிடையே வாழ்ந்து தொண்டர் பலரை உருவாக்குவாராக.

## உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் வேறிடத்தில்)

1. அறுகையும் சருகையும் அமிர்தமாக்கும்
2. அள்ள முடியும் கிள்ள முடியாது.
3. இரவும் பகலும் ஓடும் இடம்விட்டு அசையாது.
4. இறந்து போனவன் ஊரெல்லாம் போகிருன்.
5. காய்ந்த கொம்பிலே கறுத்தப் பூ.
6. எவரும் ஏரு மரத்திலே இளையதம்பி ஏறுகிருன்.
7. ஐந்துபேருக்கு இளையவன் கலியாணத்துக்கு முந்துகிருன்.
8. ஒரு கிணற்றுக்கு ஒரு மீன்:
9. ஒரு போத்தலில் இரண்டு தைலம்.
10. உடம்பு சுருங்குமுன் உள்ளே சுருங்குவான்.
11. மகாஅலெக்சாண்டரின் ஆசிரியர்.
12. ஒலிம்பிக் விளையாட்டில் புகழ் பெற்ற இலங்கையர்.
13. யாழ்ப்பாணத்தில் புதைபொருளாராய்ச்சிப் பெருமைபெற்ற இடம்.
14. கிறிஸ்துநாதர் பிறந்த நாளைக் குறிக்கும் பண்டிகை.
15. வெண்ணிற இரத்தம் உள்ள பிராணி.
16. பாம்பின் மிகக் கூடிய நீளம்.
17. சொல்லுக்கும் பொருளுக்கும் சம்பந்தம் கூறுவது:
18. மாலைக் கால நட்சத்திரம்.
19. புனுகு மானுள்ள இடம்.
20. கோரோசனை மாடு உள்ள இடம்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

**நல்லூர்........**

மூவிரு முகங்கள் கொண்டு ஏவருந்துதிக்க நின்றருள் செய்யும் முருகப்பெருமானே மும்மூர்த்திகளான முக்கண்ணன், தாமரையாசனத்தான், சக்கரப்படையான். அவரே அட்டதிக்குப்பாலகர் அவரே ஆதித்தர் பன்னிருவர், அவரே முனிவர்கள் தேவர்கள். அவரின் திருப் பெருவடிவம் என்னும் விஸ்வரூபம் மிகவும் பெரியது, வியாபகமுள்ளது.

நாரணன் என்னுந் தேவும்
　　நான்முகத் தவனும் முக்கண்
பூரணன் தானு மாகிப்
　　புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேரு
　　அநாதியாய் உயிர்கட் கெல்லாம்
காரண ஞய மேலோன்
　　கழலிணை கருத்துள் வைப்பாம்.

★ தெய்விகத்தை அனைவர்க்கும் நினைவூட்டுவது அறச்செயல் ★

# கல்விமான்கள் மூவர்

முன்னர் பத்தொன்பதாம் நூற்றுண்டில் 1879, 1880, 1881 ஆம் ஆண்டுகளிலும் ஒருவர்பின் ஒருவராகக் கல்விமான்கள் பலர் மறைந்த செய்தி பழையதானது. இந்த நூற்றுண்டில் 1981 ஆம் ஆண்டிலேயே மறைந்த கல்விமான்கள் பலருள் கலாநிதி கு. சிவப்பிரகாசம், திரு. சங்கரப்பிள்ளை வீரசிங்கம், திரு. சிவ. உல. சோமசேகரம் ஆகியோர் மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

## மனோதத்துவ நிபுணர்

கலாநிதி சிவப்பிரகாசம் இலங்கைக்குப் புகழ் தேடித் தந்த மனோதத்துவ நிபுணர். ஐரோப்பாவில் புகழ் பெற்ற பெரிய நிபுணர்களின் பாராட்டினைப் பெற்ற அபிமான மாணுக்கனுக அவர் லண்டனிற் படித்தவர். எம். எஸ். சி பி. ஏச். டி பட்டங்கள் பெற்று மீண்ட அவர், மனநிலையில் **அவதானம்** என்பது பற்றி ஆயிரக்கணக்கான தமது மாணுக்கரிடம் பரீட்சித்து எழுதிவைத்திருந்த குறிப்புகள் குவியல் குவியலாக ஓலைக்கொட்டில் எரிந்தபோது அக்கினி பகவானுக்கு ஆகுதியாயின. தமது பகிரதப் பிரயத்தனம் பத்துநிமிட நேரத்தில் சாம்பலானதைக் கண்டு சிறிதும் கலங்காமல், எலியொன்று தேங்காயெண்ணெய் விளக்கிலிருந்து திரியைப் பின்புறமாக இழுத்துச் சென்றதால் ஓலைக்கொட்டில் தீக்கிரையானதாக ஒருவாறு யூகித்தார். நூற்றுக்கணக்கான ஆசிரியர்களைப் பண்டிதப் பட்டத்தோடு பயிற்றிவிட்டதோடு, ஆயிரக்கணக்கான மாணுக்கர்களையும் உருவாக்கியுள்ளார்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்பின்னுக யாழ்ப்பாணத்திலிருந்து மேற்படிப்புக்காக லண்டன் சென்ற மூவருள் கலாநிதி சிவப்பிரகாசம் ஒருவர். மற்றையவர் கல்விப் பணிப்பாளர்கள், அருள்நந்தியும், சோமசேகரமுமாவர். இந்துக்கல்லூரிப் பழைய அதிபர் குமாரசுவாமி அவர்களும் இக்கூட்டத்தில் ஒருவர். அருள்நந்தியும் சோமசேகரமும் பட்டங்களுடன் மீண்ட பின்னரும் சிவப்பிரகாசம் அவர்கள் மேலும் தொடர்ந்து கலாநிதிப் பட்டத்துக்குப் படித்தார்.

புலத்துறைபோன மேலைப் புலோலியில் பெரும் புலவராக வாழ்ந்த குமாரசுவாமிப் புலவரின் புதல்வரே சிவப்பிரகாசம். புலமையும் விவேகமும் பெருந்தன்மையும் முறுக்கேறிய சிவப்பிரகாசம் அவர்களின் சாதாரண இனிய எளிய வாழ்க்கை எல்லோரையும் பிரமிக்கச் செய்தமை பெரிய வரலாறு.

## இங்கிலீஸ் பூடு

மகாராணியின் ஆங்கிலம் என்று மதிப்பும் உலகப் புகழும் பெற்ற அந்த அந்நிய மொழியை, மிலேச்சர் பாஷை என்று நம் பழந்தமிழர் ஒதுக்கிய அம்மொழியை எந்தப் பல்கலைக்கழகத்துப் படியிலும் ஏருமல், கிறிஸ்தவர் சூழலில் வாழ்ந்து புத்தகத்தின் புத்தகம் என்று மதிக்கப் பெற்ற பைபிளை மனப் பாடஞ் செய்து அதில் வரும் ஆங்கிலத்தை நன்ருக அறிந்தவர் அச்சுவேலியில் ஆசிரியராயிருந்த சங்கரப்பிள்ளை வீரசிங்கம் அவர்கள்.

வித்தகரும் விவேகியுமான வீரசிங்கம் நல்லவர், பெரியவர். நன்மை செய்வதில் முன்னணியில் நிற்பவர். சங்கரப்பிள்ளை என்றுலே நன்மை செய்பவர் என்பது சித்தாந்தக் கருத்து. நன்மை செய்யும் தன்மை வாய்ந்தவர்களாய்த் தம்மைந்தர்கள் வாழவேண்டும் எனக்கருதிய வீரசிங்கம் தம் தந்தையாரின் பெயர் நிலைக்குமாறு தம்மைந்தர் எண்மருக்குச் சங்கரினைப் பெயரீற்றில் பெயரிட்டுள்ளார். தர்மசங்கரி, ஆனந்தசங்கரி என அவர்கள்பெயர்களை அடுக்கடுக்காகக் கூறலாம்.

பட்டதாரியல்லாத வீரசிங்கம் பட்டதாரிகளுக்கு ஆங்கில ரசனை உண்டாக்கியதைப் பலரும் அறிவர். ஆங்கிலச் சொற்களை அழுத்தந்திருத்தமாக உச்சரிப்பதில் வீரசிங்கம் புகழ்பெற்றவர். ஆங்கிலம் கற்பிப்பதில் தமக்கேயுரிய தகுதியான முறையொன்றினைக் கையாண்ட திறமையை அக்காலத்து ஆங்கிலம் வல்ல எம். ஏ. முத்துக்குமாரு முதலானவர் பெரிதும் பாராட்டினர். வீரசிங்கம் அக்காலத்தில் கொழும்பில் ஆசிரிய கலாசாலையில் விஜயானந்த தகநாயக முதலானேருடன் பயின்றபோது அவர் சிறந்த மாணுக்கர் எனப் பெயர் பெற்றவர்.

கொட்டிலொன்றில் ஆரம்பிக்கப்பெற்ற பாடசாலை ஒன்றினை முதற்றரக் கல்லூரியாக்கிப் புத்தூர் சோமஸ்கந்த எனப் பெயர் நிலைக்கச் செய்த பெருமை அவருக்குரியது. சாதாரண ஆசிரியர் அதிபராய் முன்னேறுவதற்குப் பல்வேறு திறமைகள் அமைய வேண்டும். அத்தகைய திறமையாளரைப் பாடசாலை முகாமையாளர் வீடுதேடி வந்து அழைத்துச் சென்ற காலம் அந்தக் காலம்.

ஆயிரம் பிறை கண்டு அமரரான வீரசிங்கம் அவர்களை நினைத்து அழத்தேவையில்லை. அவர் வழியில் நான்கு ஆசிரியர் சேவை செய்ய முன்வந்தால் நம் மாணுக்கர் பரம்பரையில் நல்ல மனிதர்கள் உருவாகலாம்.

---

## எனது யாழ்ப்பாணமே!

நல்லதமிழில் தமிழ்ப்பற்று தமிழுணர்வு ஊட்டுவதோடு, நல்ல தமிழ் எழுதவும், ஆங்கிலப் பதங்களுக்கு நற்றமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தவும் இளந்தலைமுறையினருக்கு இலகுவாகப் பழக்குவதோடு, உலகத்தமிழ் மாநாடுகளின் வரலாறு, அவை நடைபெற்ற சூழ்நிலைகள், பெறுபேறுகள், பிறநாட்டறிஞர்கள் தமிழ்மீது கொண்ட தீராக்காதல், ஈழத்தறிஞர்களின் உணர்ச்சிவளம் உபகரிப்பு, தமிழாராய்ச்சி மாநாட்டின் உற்பத்தி, தமிழ் மூலவளம் என்றின்னேரன்ன விடயங்கள் பலவற்றையும் உள்ளடக்கிய ஒரு நூலை உயிரியல் முதுமானிப்பட்டதாரியாகிய பிறவிச்சைவன் க. சச்சிதானந்தன் பண்டைத்தமிழ்ப் பண்பாடு கமழக்கமழ எழுதியுள்ளார். நூல்பற்றிய விபரம் காந்தளகம் 213, காங்கேயன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் நிலையத்தில் அறிந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

★ பொதுநல சேவையைப் பணிவோடு செய்தல் வேண்டும் ★

# மாவட்ட அபிவிருத்தி

## மாவட்டம் எங்கும் மாமரம் பெருகவேண்டும்

அமைப்பிலும் ஆக்கத்திலும் முயற்சியிலும் விவேகத்திலும் வட இலங்கை தலையாயதுதான். சோம்பல் என்பதை அறியாத எம் மூதாதையர் செய்த ஆக்கப்பணிகளால் நாம் தலையுயர்த்தி வாழ்ந்துவந்தோம்.

எங்கள் பிரதேசம் மேலும் அபிவிருத்தியடைவதற்கான முறையில் கைத்தொழிலும் கமத்தொழிலில் நெல் கரும்பு முதலியவற்றை மிகுதியாகச் செய்யும் வசதி எமக்கில்லாவிட்டாலும் பழமரங்கள் பயிரிடுவதற்குப் போதிய வசதிகள் உள்ளன.

கனிமரங்களில் மிகுந்த பயன்தரும் மா, பலா, வாழை என்னும் மூன்றும் மிகச் சிறந்தவை. அவற்றுள் மா பழங்களின் அரசன். அதற்கு ஆமிரம், ஆம்பிரம் எகின், கொக்கு, சிஞ்சம், சூதம், சேகரம், மாழை, மாந்தி என்றெல்லாம் பெயர்கள் இட்டுச் சிறப்பித்துள்ளார்கள். உணவோடுண்ணும் பழங்களில் மா மிகச்சிறந்ததென்பதைக் காரைக்காலம்மையார் கதையால் அறியலாம். ஆயிரத்துஐந்நூறாண்டுகளுக்கு முன்னரே நம்மவர் மாம்பழத்தின் அருமையை நன்கறிந்திருந்தனர்.

மாம்பழங்களுள் யாழ்ப்பாணத்துப் பழங்கள் மிகுந்த சுவையும் மணமும் குணமும் பயனும் உள்ளவை. மாமரம் நன்கு வளர்வதற்கேற்ற சுவாத்தியமும் மண்ணும் நம்பிரதேசத்தில் உண்டு. ஒரே மரத்தில் பலவித இனங்களை ஒட்டி நல்லமுறையிற் பயன்பெற வழிகாட்டும் நிபுணர்கள் நம்பிரதேசத்தில் ஊர்கள் தோறும் இருக்கிறார்கள்.


### உடனடியாகக் கவனிக்கவேண்டியவை

பருவத்தே பயிர் செய்பவர் பண்பாட்டால் உயர்ந்த தமிழர். காலமறிந்து கருமம் ஆற்றும் பெரியவர்கள் எங்கள் பிரதேசத்தில் இந்த ஆண்டில் ஆயிரமாயிரமாக மாங்கன்றுகளை உண்டாக்குதல் வேண்டும். மாம்பழத்தை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்திப் பொருள்களைச் செய்யும் தொழிலதிபர்கள் மாங்கொட்டைகளை வீணில் எறியாது இவற்றை ஏழைகளிடம் கொடுத்து நடச் செய்யலாம். மாங்கன்றுகளை உரிய காலத்தில் நல்ல மரங்களில் ஒட்டி, ஒட்டு மாங்கன்றுகளை வரண்ட பிரதேசமெங்கும் நடச் செய்யலாம். வளர்ந்துவரும் முழங்காவில் பகுதியில் மாமரம் நன்கு பயன் தரும். மர முந்திரிகைக்கு மேலாக, அல்லது ஈடாக நாம் மாமர அபிவிருத்தியைக் கவனித்தல் வேண்டும். மாமரம் நம்மைக் காக்கும்.

எங்கள்நாட்டில் பங்குனி முதல் ஆனி ஆடிவரை மாமரம் பயன்தருகிறது. ஒருமரம் ஐந்நூறு, அறுநூறு பழம் தரும். வயதுபோகப் போக அது ஆயிரம் பழம் தரும். சில மரங்கள் 1500 வரையில் தருவதும் உண்டு. மாமரம் அறுபது எழுபது ஆண்டுகளுக்குமேலாக நின்று தளராது பயன் தரும்.

கிளிநொச்சிப் பிரதேசமெங்கும் மாமரக் காடாக்கினால் நல்லது. குடாநாட்டிலும் வெற்றிடங்களில் நல்ல இனத்து மாமரங்களை உடனடியாக நாட்டுவோம். உணவு கிடைக்காதபோது இரண்டு மாம்பழங்கள் எமக்குப் போதிய உணவாகும். அன்றி மாம்பழத்தோடு சோறுண்பதும் நல்ல சுவையாகும். உணவும் நன்கு சமிபாடாகி நல்லிரத்தம் உண்டாக்கும்.

புளிமாங்காய் என்று ஒன்றை ஒதுக்கத் தேவையில்லை. புளிமாங்காய் ஊறுகாய், அச்சாறு, வற்றல் என்பன செய்வதற்கு மூலப்பொருளாகும். அபிவிருத்தி இராசாக்கள் அவசியம் கவனிப்பார்களாக.



## பஞ்சதந்திரம்

முயற்சியில்லாமல் எதுவும் நடைபெறமாட்டாது, விதிவசமாகச் சோறு கிடைத்தாலும் கையின் முயற்சியில்லாமல் அந்தச் சோறு வாய்க்கு எட்டாது. மிருகங்கள் சிங்கத்தின் வாய்க்குள் தாமாக வந்து விழுவதில்லை. உற்சாகம் காணப்படுகிற இடத்தில் திறமையும் வலிமையும் இருக்கும். அங்குதான் லட்சுமி நிச்சயமாகத் தங்குவாள்.

வேதம் தரும் பயன் வீட்டில் ஹோமம் வளர்த்தல், கல்வி தரும் பயன் நன்னடத்தை, மனைவி தரும் பயன் சுகமும்; புத்திர சந்தானமும், செல்வம் தரும் பயன் தானமும் தருமமும் போகமும்.

மேன்மக்களின் உள்ளம் தாமரை மலர்போல் மிருதுவாயிருக்கும். ஆபத்துக்காலத்தில் கற்பாறை போலக் கடினமாயிருக்கும். அன்னப் பறவைக்கு வெண்மையும் கிளிக்குப் பச்சையும், மயிலுக்குப் பலவர்ணத் தோகையும் தந்த கடவுள்தான் நம்மையும் படைத்துள்ளார்.

தூயமனத்தோடு விரதம், நியமம், உபவாசம் முதலிய தர்மங்களைச் சிறிதளவாவது தினந்தோறும் செய்ய வேண்டும்.

திருப்தி என்ற அமுதத்தைப் பருகுவதால் நிம்மதியுள்ள மனத்துக்கு இன்பம் உண்டாகிறது. ஆசை பிடித்து அலைகிறவனுக்கு எப்படி இன்பம் கிடைக்கும்? திருப்திக்கு மேலான இன்பமும், சகிப்புத்தன்மைக்கு நிகரான தவமும், தயைக்கு ஈடான தர்மமும் இல்லை, இல்லை.

★ சீலமும் சூழ்நிலையும் மனிதனை மேலோனுக்குகின்றன ★

கவிதைப்பகுதி

## கதைக் கவிதை
## "நன்றி மறப்பது நன்றன்று"

(யாழ். ஜெயம்)

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பின்னுக இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தமிழ்மலர் வரிசைநூல் வெளியிட்டுவந்த காலத்தில், சிறுவர்க்கான பாடல்கள் பாடிய கவிஞர் வரிசையில் ஆசிரியர் விக்ரர் அவர்களும் ஒருவர். அவர் ஜெயம், பொன், சாந்தி. சோதி முதலிய புனைபெயர்களில் பாடிக்குவித்த பாடல்கள் ஆயிரக்கணக் கானவை. தனிச் செய்யுள்களாகவும், கதைக்கவிதைக ளாகவும், கவியரங்குக் கவிதைகளாகவும் அவர் பாடியவை அதிகம். முன்னர் அன்பர் ஆசீர்வாதம் அவர்கள் வெளி யிட்ட விவேகி என்னும் திங்கள் ஏட்டில் இவர் கவிதை கள் இனமத வேறுபாடு கருதாது தமிழ் கருதி வெளிவந் தன. நீரோட்டம் போன்ற விருத்தப்பாவில் இவர் பாடிய கடவுள் வணக்கப் பாடல்கள் நூற்றுக்கணக்கானவை. அண்மையில் அன்பர் ஜெயம் வெளியிட்ட இதயவீணை இரு நூற்றுத் தொண்ணூற்றிரண்டு பக்கங்களில் நூற்றுக்கணக் கான பாடல்களைக்கொண்டுள்ளது. இக்கால இலக்கிய வரலாற்றில் இடம்பெறக்கூடிய இனிய கவிதைகளை இயற் றிய ஜெயம் அன்பொழுகப் பேசும் ஆசிரியர். நல்ல குடும் பத் தலைவர், நல்ல தந்தை, நல்ல மாமன், நல்ல தாத்தா வும்கூட. அன்பர் எழுதியனுப்பிய கவிதைகளில் ஒன்று பழைய காகிதக் குவியலில் மறைந்துகிடந்து அண்மையில் கண்ணிற்பட்டது. முத்துப்போன்ற இக்கவிதையை எம் பாலர்கள் படித்துச் சுவைக்கவேண்டும் என இங்கே வெளியிடுகிறோம். கவிஞருக்கு நன்றி. அவர் வாழ்க. அவர் கவிவளம் பெருகுக.

வேட்டைக்குச் சென்றவர் காட்டினிலே — நல்ல
வெண்புள்ளி மானென்றைக் கண்டனராம்
ஓட்டமாய் ஓடித் துரத்தினராம் — அது
உள்ளம் பயந்து கலங்கியதால்

பாய்ந்து விழுந்தடர் காட்டினிலே — ஒரு
பற்றையுட் சென்று மறைந்ததுவாம்
ஓய்ந்துவிட் டார்களவ் வேடர்களும் — அதை
ஓரிடமுந் தேடிக் காணவில்லை.

சத்துராதி வேடர் போயிருப்பார் — எனச்
சற்றுநே ரத்தில்மான் எண்ணியதால்
பத்திர மாய்த்தனை மூடிநின்ற — அந்தப்
பற்றைச் செடிகளைத் தின்றதுவாம்.

பற்றையும் ஆடி அசைந்திடவே வேடர்
பக்கத் திருந்துமே கண்டுவிட்டார்
சுற்றி வளைத்துப் பிடித்தனராம் — அந்தச்
சுந்தர மானுயிர் நீக்கினராம்.

நல்லுத விதந்த பற்றைதனைச் — செய்த
நன்றி மறந்துமான் தின்றதனால்
நல்லுயிர் தன்னை இழந்ததுவாம்— என்றும்
நன்றி மறப்பது நன்றல்லவே.

## கீரையோ கீரை

வீட்டுச் செல்வம் மாடு. தோட்டச் செல்வம் கீரை. தாதுப் பொருள் நிறைந்ததாய், உப்புச் சத்துள்ளதாய், உயிர்ச்சத்து உள்ளதாய், நீர்த்தன்மை நிறைந்ததாய், சமிபாட்டை இலகுப் படுத்தி இலகுவில் சமிபாடாவ தாய், காப்புணவாய், ஏழைகள் முதல் செல்வர்கள் வரை எல்லோரும் ஏத்துவதாய், சிறுவர் முதல் முதிய வர் வரை எல்லோருக்கும் ஏற்றதாயுள்ள கறி கீரைக் கறி.

பொன்னிலும் சிறந்தது பொடிக் கீரை. பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியாதே என்றெல் லாம் கீரையின் உயர்வைக் கூறுவர். இரத்தத்துக்கு இன்றியமையாது வேண்டப்படும் கல்சியம், சோடியம், குளோறின் முதலிய உப்பு விசேடங்கள் கீரைவகைகளில் போதியளவு உண்டு.

உப்புவகைகளோடு கீரையில் உள்ள உலோக வகை களும் உடன் சேரவே இரத்தோட்டம் என்னும் குருதி யோட்டம் நன்கு நடைபெறுகிறது. இரத்தம் சுத்தமாகி றது. இரத்தத்திலுள்ள வெண்ணுடலி செவ்வுடலி என்னும் கோப்பசில்கள் செவ்வனே இயங்குகின்றன. இரத்த சோகை, இரத்த கான்சர் என்பன கீரை உண்ட வரை எட்டியும் பாராது கிட்டவும் வராது.

உடம்பில் சொறி சிரங்கு வராமல் காப்பது கீரை. மலத்தை இலகுவாகக் கழியச் செய்வது கீரை. உடம் பின் வெப்பத்தைத் தணிப்பது கீரை. சிறந்த சாத்விக உணவு கீரை என்பதால் யோகியரும் கீரையையே பெரி தும் விரும்புவர். சுப்பிரமணிய பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணச் சாமி கீரையில் நல்லெண்ணெய் கலந்து சோறுண்ணும் வழக்கம் உண்டென்பர். பருப்புக்கு நெய் போலக் கீரைக்கு நல்லெண்ணெய் உவப்பு.

கீரையை வீட்டு முற்றத்தில், பூச்சட்டிகளில் விளை யாட்டாக உண்டாக்கி ஒடித்துச் சமைக்கலாம் என்று வாயளவில் பிரசாரஞ் செய்யாமல் செயலில் செய்து காட்டி ஆயிரக்கணக்கான கீரைவிதைப் பக்கெற்றுகளை இலவசமாகக் கொடுத்துவரும் மில்க்வைற் தொழிலதிபரி டம் எவரும் என்றும் கீரைவிதைகளை இலவசமாகப் பெற்றுத் தோட்டஞ் செய்யலாம்.

## பயனுள்ள அன்பளிப்பு

அடுத்துவரப்போகும் நவராத்திரி காலமுடிவில் வித்தி யாரம்பம் செய்பவர்களுக்கு ஆயிரக்கணக்கான ஏடுகள் தேவை. அவற்றை இப்பொழுது தொடங்கினுல்தான் தயாரித்து முடிக்கலாம் என்று குறிப்பறிந்த இணுவில் வாசி யாய திரு. பரராசசேகரம் நூற்றுக்கு மேற்பட்ட ஓலைச் சார்வுகளை மில்க்வைற் தொழிலதிபரிடம் அன்பளிப்புச் செய்துள்ளார். திரு. பரராசசேகரம் மில்க்வைற் தொழிற் சாலை அலுவலகத்தில் கணக்காளர் பகுதியில் கடமையாற்று பவராவர்.

## புகைத்தல்

புகைத்தலின் பயனாக உண்டாகும் கேடுகளை உலக வைத்திய நிபுணர்கள் ஒரேமுகமாக எடுத்துவிளக்கியுள்ளார்கள். கலிபோணியாவில் அண்மையில் நடைபெற்ற ஆராய்ச்சியின் பயனாக இருதய நோய்க்குப் புகைத்தல் முக்கிய காரணம் என்று கண்டு பிரசுரித்துள்ளார்கள்.

## பச்சைப்பயறு

எங்கள் பிரதேசத்தில் எங்கும் நன்றாக விளையும் பச்சைப்பயறு இன்று உச்சவிலை விற்கிறது. கமகமவென நறுமணம் வீசும் பயற்றங்கறி குழந்தைகள் முதல் முதியவர் வரை விரும்பி உண்ணும் அரிய உணவாகும். கறிசமைக்கப் பயன்படுவதோடு, மோதகம், கொழுக்கட்டை, பணியாரம் முதலியன செய்யவும், வறுத்து மாவாக்கி உபயோகிக்கவும் அது பயன்படுவது. மாமயிற் போன்ற உணவுப் பாணி செய்வதற்கு பயிற்றம் முளை பயன்படும் என்பர். இவற்றையெல்லாம் கருதி எங்கள் கமக்காரர் இன்னும் அதிக பயறு செய்வார்களாக.

## சஞ்சலந்தீர்க்கும் சணல்

ஆதவன் அஸ்தமிக்காத அளவில் ஐம்பெருங் கண்டங்களில் அகன்றுவிரிந்த அகலிடத்தை அடக்கி ஆண்ட பிரித்தானியப் பேரரசின் இரண்டாவது பெரிய நகரம் கல்கத்தா என்றால் அதைவிட வங்காளத்துக்கு வேறு பெருமையும் வேண்டுமோ? வற்றாத பெருவளப்பம் பொருந்திய கூக்ளி நதியின் கரையில் அமைந்த பெருமை கற்கத்தாவுக்குச் சிறப்பு. கற்கத்தா பெருந்துறைமுகமாகவும் உள்ளது. அங்கே பெருந்தொகையாக ஏற்றுமதியாகும் பண்டங்களுள் சணல் தனிச்சிறப்புள்ளது. அயலில் உள்ள தண்டி என்னும் நகரம் சணல் விளைவுக்கு உலகப் புகழ் பெற்றது. இற்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன்னரே கூக்ளி நதி தீரத்திலே அறுபதுக்கு மேற்பட்ட சணல் ஆலைகள் அமைந்திருந்தன. அங்கே அறுபதினாயிரத்துக்கும் அதிகமான தறிகள் அயராது வேலை செய்தன. அங்கே இருபது லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர் உழைத்தனர். சணற் கயிறு, சாக்கு, விளையாட்டுப் பொருள் முதலியன அங்கே உற்பத்திப் பொருள்.

யாழ்ப்பாணத்தவருக்குச் சணல் ஒரு வரப்பிரசாதம். வற்றிவரண்டுகிடக்கும் வயல்களை வளம் பெறச் செய்வதற்குச் சணலை விதைத்து அது முளைத்துப் பூக்கும் பருவத்தில் மடக்கியுழுதால் நல்ல பசுந்தாள பசளைகிடைக்கும். ஒருமுறை சணல் விதைத்து அனுபவம் பெற்றவர்கள் இன்றும் தொடர்ந்து செய்கிறார்கள். இத்தகைய அனுபவத்தை ஊக்குவிக்குமுகமாக மில்க்வைற் தொழிலதிபர் சாக்குக் கணக்காகச் சணல் விதைகளை உருத்திரபுரத்தில் எடுத்துவந்து விநியோகித்ததோடு அதைப் பற்றிய விளக்க நூலும் வெளியிட்டுதவினார்.

இனி எங்கள் மாவட்ட அபிவிருத்தியாளர் சஞ்சலந் தீர்க்கும் சணலைக் கொண்டு சாக்குப் பை, சணற்கயிறு முதலியன செய்வதற்கு வழிவகை செய்வார்களாக. காரியாதிகாரியாகவும், காணியதிகாரியாகவும் வரண்ட பிரதேசமெங்குங் கடமையாற்றி ஆங்காங்கே மகான், பெரியவர், நல்லவர் என்றெல்லாம் பெருமதிப்புப் பெற்ற திரு. தம்பிமுத்து அவர்கள் இதனைக் கவனிப்பாராக.


## சிறுவர்க்கான சிந்தனைத் துளிகள்

அரைகுறைப் படிப்பு ஆபத்துக்கிடமாகும்.
ஒழுக்கம் உள்ளவர் உயர்ந்தவராவர்.
இளமைப் பருவத்தில் கற்றல் மிகச் சுலபம்.
உடற்பயிற்சியால் உடம்பு உறுதிபெறுகிறது
காலத்தை வீணாகக் கழிக்கலாகாது.
கோபம் எதனையும் கூடிவர ஒட்டாது.
மனத்தில் உள்ளதை மறைத்துப் பேசலாகாது.
முயற்சியுள்ளவர் முன்னேற்றமடைவர்,
பிறர் பேசும்போது குறுக்கே பேசலாகாது.
தாய்க்கு அடங்காதவன் ஊருக்கு அடங்கான்.
தாழ்விலே பெருமை வாழ்விலே தாழ்மை.
தீ மிஞ்சினாலும் பகை மிஞ்சலாகாது,
துட்டரைக் கண்டால் தூர விலகு
தூங்கும் நரிக்கு இரை கிடையாது.
தேர்ந்தவன் என்பவன் கூர்ந்தறிவாளன்.
தோட்டிபோல் உழைத்தால் துரைபோல வாழலாம்.
நயத்தால் ஆவது பயத்தால் ஆகாது.
நல்லார் பொல்லாரை நடத்தையால் அறியலாம்.
நன்மையும் தீமையும் நாக்கில் இருப்பவை.
நூல் கற்றவனே மேலானவனாவன்.
நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்.
பயனின்றிப் பேசுபவர் மனிதப் பதர்.
பழிப்பான கல்வி பாவத்தின் ஊற்று.

## ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர்

கோண்டாவில் குடைச்சாமியார் சமாதிக் கோயிலின் அணித்தாகக் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் ஒன்று அண்மையில் அழகும் அருளும் ததும்ப மலர்ந்துள்ளது. பசும்பொன் எனத் தகும் அமைப்பில் அழகிய திருவுருவப் படங்களுடன் வெளிவந்துள்ள இம்மலருக்கு விளம்பரம் தேவையில்லை. விரும்பியதைக் கொடுத்து வாங்கிப் படித்துப் பயன்பெறவேண்டிய விடயங்கள் விரவியுள்ளன. வேண்டிய வேண்டியாங் கெய்த வரம்வேண்டுவமே என்று பண்டிதமணி இம்மலரை வாழ்த்துகிறார். குடைச்சுவாமியாரின் பெருமையையும் விநாயகப் பெருமானின் பேரருளையும் இம்மலர் புகட்டுகிறது என்று மகாதேவாசிரம வடிவேற்சுவாமிகள் சொல்லுகிறார். விநாயக வணக்கம். கும்பாபிஷேக முறை விளக்கம் கோயில் என்பன போன்ற விடயங்கள் பெருவிருந்தாயும் அருமருந்தாயும் அமைந்துள்ளன.

★ ஆசைக்கு அடிமையாவது மிகக்கொடிய பாவம் ★




# மாவட்ட அபிவிருத்தி

## தமிழ் மொழி வாழவேண்டும்

இலங்கைப் படம் ஒன்றைச் சுவரில் தொங்கவிட்டு அயலில் நின்று பார்க்கும்போது, எமக்குத் தலையிருப்பது போல, இலங்கைக்கு யாழ்ப்பாணம் தலையாய் இருப்பதை அவதானிக்கலாம். இதனைச் சோமசுந்தரப் புலவர் இலங்கைவளமும் தாலவிலாசமும் என்னும் நூலில் அழகாகப் பாடுவர்.

> எண்சாண் உடம்புக்குச் சென்னி சிறந்திடும்
> என்றே உரைப்பர் அதுபோல
> பொன்சேர் இலங்கைச் சிரமென வேவரும்
> புண்ணியம் ஓங்கிடும் யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தைப் பற்றியும் யாழ்ப்பாணத்தாரைப் பற்றியும் உலக மக்கள் நன்கறிவர். யாழ்ப்பாணம் சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாத்து வந்தது என்பதை உலகமக்கள் நன்றியறிதலோடு பாராட்டியுள்ளார்கள். மறைவாக நமக்குள்ள பழம் பெருமை பேசுவதில் மகிமையில்லை. உண்மைதான். ஆனால் எம்மவர் எம் முந்தையோர் எமக்கு விட்டுச் சென்ற பழுதிலாச் சிறப்பை நம் எதிர்காலத்துச் சந்ததியினருக்கு எடுத்துச் சொல்லிவைப்பது நம் தலையாய கடனாகும். தலையாய நாட்டில் வாழும் நாம் தலையாய மனிதராயிருப்பதில் தவறக்கூடாது.

தமிழர் பாரம்பரியமாக மொழியபிமானம் உள்ளவர்கள். நாட்டபிமானம் உள்ளவர்கள். நல்ல முயற்சியுள்ளவர்கள். உடல்வருந்த உழைத்து உண்பதில் இன்பங்காண்பவர். திரைகடலோடியுந் திரவியந் தேடுவதில் தமிழர் தலையாயவர். பென்னம் பெரிய சமுத்திரங்களுக் கூடாகச் சின்னஞ்சிறு கப்பல்களில் தூரகிழக்கு நாடுகள், தென்னமெரிக்கா நாடுகள் எங்கும் சென்றுவந்தவர்கள்.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

# கோயிலில்லா ஊர்கள் . . .

இன்று இலங்கையின் பலபாகங்களிலும் திருக்கோயில்கள் பல புனரமைக்கப்பெற்றும், கோபுரங்கள், தேர்கள் சமைக்கப்பெற்றும், கும்பாபிஷேகங்கள் செய்யப்பெற்றும் வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் சமயாபிமானமுள்ள இளைஞர்கள் தங்கள் இலங்கை இந்து இளைஞர் பேரவை மூலம் தொழிலதிபர் கனகராசா அவர்களுக்கு எழுதியுள்ள கடிதம் உருக்கமானதாய் உள்ளத்தைத் தொடுவதாயுள்ளது.

கோமாரி, கொக்கிளாய், இறக்கந்தை முதலிய இடங்களில்லா வணங்குவதற்குக் கோயில்கள் இல்லையாம். கோயிலில்லா ஊரிற் குடியிருக்கும் இவர்களுக்கு இந்துசமயத்தவர் இயன்றவரை கோயிலமைப்பதற்கு உதவுவார்களாக

# தமிழ் வளர்த்த ஐரோப்பியர்

## சாள்ஸ் தியோபிலிஸ் எட்வேட் இரேனியுஸ்

இரேனியுஸ் ஐயர் என வழங்கிய இவர் ஜேர்மனியிலிருந்து 1812ம் ஆண்டில் சென்னைக்கு வந்தார். தமிழ்நாடெங்கும் சேவைசெய்து வந்தபோது, இவர் முதலில் 1820ம் ஆண்டில் திருநெல்வேலியில் தங்கினார். ஜேமன் பிரபுவான டோன் என்பாரின் பொருளுபகரிப்பைப் பெற்றுத் திருநெல்வேலியில் பெருநிலப்பரப்பை விலைக்கு வாங்கி அங்கே பலவித தர்மப்பணிகள் செய்வதற்குத் தர்மசங்கம் என்னும் சங்கத்தை நிறுவினர். பின்னர் நூலாசிரியர் சங்கம் நிறுவிப் பலவிதமான பாடநூல்களை அச்சேற்றினர்.

இவரின் சேவையைப் புகழ்ந்து திருப்பாற்கடல் நாதகவிராயர் என்பார், ''இரேனியுஸ் பண்புள்ள குருஅனை நிகரன்பும் இயேசுவினருளும் அவனியிற் பொறையும் விண்சுடரோன் தனை நிகரொளியும் மலைநிகர் வலியும் தழைத்திட வாழ்ந்து'' என்றெல்லாம் பாடியுள்ளார். இரேனியுஸ் தம் தமிழறிவை இராமானுஜக் கவிராயர் என்பாரிடம் முறையாகப் படித்துப் பெற்றார். இரேனியுஸ் பல நூல்கள் எழுதியவர். அவரின் பைந்தமிழ் நடையை ஜி. யு. போப் வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்துள்ளார்.

# மிருதங்க வித்துவான் அம்பலவாணர் மறைவு

நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் முதுமையெய்து முன்னரே மறைந்தமை யாழ்ப்பாணத்து இசைக்கலை வளர்ச்சிக்குப் பேரிழப்பாகும். அவர் சிறந்த மிருதங்க வித்தகராயிருந்ததோடு தாமறிந்த வித்தையை இளம் தலைமுறையினருக்கு அன்பாதரவோடு குருகுலக்கல்விமுறையில் சொல்லிக்கொடுத்த பெரியவர். அவர் மிருதங்கம் உருவாக்கும் கலையிலும் பாண்டித்தியம் பெற்றவர். இவ்வாறெல்லாம் அவரைப்பற்றி அன்று அவர் மறைவின்போது அஞ்சலியுரை நிகழ்த்திய மில்க்வைற் தொழிலதிபர் கூறினர். அம்பலவாணரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

★ கடவுள் உணர்வுக்கு உடலுணர்வு பகை ★

## பழந்தமிழர் வீரம்

தமிழர் வீரத்தைப்பற்றிப் புறநானூறு திருக்குறள் முதலிய நூல்கள் கூறுகின்றன: தமிழன் வாளோடு பிறந்தவன் என்றும் கூறுகின்றன. வீரமும் காதலும் தமிழ் நாகரிகத்தில் சிறப்பிடம் வகித்தன. முயல்வேட்டையாடியவன் வீரத்தைப் புலவர் புகழவில்லை.

தமிழன் கையாண்ட ஆயுதவரிசைகள் விஞ்ஞான வளர்ச்சிக்கு முற்பட்டவையாயினும் அதிக முன்னேற்றமடைந்தவை. தமிழன் பல ஆயுதங்களைக் கையாண்ட செய்தி படைக்கலப் பயிற்சியில் அறியக்கிடக்கிறது. ஔவையார் அதிகமானின் பழுதுபட்ட ஆயுதவரிசைகளைக் கொல்லன் உலைக்களத்திற் கண்டவாறு பாடியுள்ளார்.

தமிழன் ஆயுதங்களுக்கு நெய்பூசி, பீலியணிந்து, மாலைசூட்டி, வணங்கி, கண்ணில் ஒற்றித் தெய்வ நினைப்போடு பிரயோகித்தான். ஆயுதம் இல்லாமல் நிற்பவனுக்கு ஆயுதம் உதவிப் போரிட்டான். ஆயுதபூசை செய்தான். தமிழன் கண்ட ஆயுதங்கள் வில், அம்பு, வேல், வச்சிரம், வாள், உடைவாள், பிண்டி, பாலம், தண்டம், மழு என்பனவும் பிறவுமாம். இவற்றைவிட நூற்றுவரைக் கொல்லி என்னும் ஆயுதம் ஒன்றிருந்தது. அதை சதக்கினி என்றும் கூறுவர். எறிபுழை என்னும் ஒரு வகையான கைக்குண்டும் அக்காலத்து ஆயுதமாம். அம்புகளின் நுனியில் பாம்பின் நஞ்சு பூசப்பட்டிருந்தன. சில மூலிகைகளின் சாறு பூசப்பட்டிருந்தன. சில அம்புகளில் எரி மருந்துகள் தோய்க்கப்பட்டிருந்தன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அன்னப்பொறி, மயிற்பொறி எனவரும் தொடர்கள் வானத்துப் பறக்கும் வாகனங்களின் பெயராகும்.

பலம், வலி, ஆற்றல், தீரம், தைரியம், திடம், வலிமை, வீரியம், சௌரியம், பராக்கிரமம். சக்தி, சாமர்த்தியம், திறமை என்பனபோன்ற சொற்கள் வீரத்தைக் குறிப்பனவாகும்.

---

## பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்


பன்முகப் பணிபுரியும் இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் தங்கள் பிரதேசத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். அவர்களுக்குத் தையல் மெசின் ஒன்றை உபகரித்த மில்க்வைற் தொழிலதிபர் 24-6-81இல் நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றித் தையல் நிலையத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்கள்.

---

### விடைகள்

1. பசு 2. தண்ணீர் 3. மணிக்கூடு 4. கருவாடு 5. குடை 6. பேன் 7. சின்னவிரல் 8. நாக்கு 9. முட்டை 10. புளியம்பழம் 11. அரிஸ்ரோட்டில் 12. டங்கன்வைற் 13. ஆனைக்கோட்டை 14. நத்தார் 15. நண்டு 16. முப்பத்துமூன்றடி 17. வியாகரணம் 18. வெள்ளி 19. நேபாளம் 20. திபெத்.

*( Continued from Past Issue )*



## The Tamil View of Life

**S. Natesan**

The unique value of the Kural lies in its combination of wordly and other - wordly wisdom. It deals not only with the moral and spiritual aspects of life, but also with its material and practical aspects. In the whole range of the Great Literature of the World it would be difficult to find another book like the Kural which surveys and sums up life in varied phase. In Sanskrit, as in Tamil, there is the conception of the four supreme ends of life - Purusharthas as they are called - compressing Dharma (Righteousness), Artha (Wealth), Kama (Love) and Moksha (Spiritual Liberation). Sanskrit, rich as it is in its Literature bearing on these subjects has not a single work, which has brought the four Purusharthas under one compass. It is the pride of the Tamil Language that in the Kural, there is a conspectus of the four purusharthas and there is a touch of originality in there treatment, revealing the Tamil Mind. This originality is seen at its best in the chapters. on Love, which, in the characteristic style of ancient Tamil Love - poetry, depicts some love situations in which the idealized lovers give glimpses of their transformed selves.

---

## பறவைகளே!

சூழலிலுள்ள பறவைகளின் இயற்கை அழகினையும் அவைதம் உணர்வினையும் கண்டும் கேட்டும் அனுபவித்த உயிரியல் நிபுணர் ஒருவர் தமது நாட்டுப்புறத்துப் பறவைகளைப் பற்றியும் புறத்தே கண்டு மகிழ்ந்த பறவைகளைப் பற்றியும் அழகாகக் கூறுகிறார். பறவைகள் பறத்தல் மாத்திரம் செய்யாமல் நமக்குப் புத்தி புகட்டுகின்றன என்பதையும் ஓவியங்கள் நிறைந்த தமது நூலில் கூறுகிறார். மக்கள் பண்பாடுபற்றி எழுதிய சச்சிதானந்தம் அவர்களே இந்நூலையும் தமது காந்தளகத்தில் வெளியிட்டுள்ளார்.

---

★ இறைவனை நூல்களில் தேடிக் காணமுடியாது ★

## அன்பர்கள் திருமணம்

உடுவில் புதுமடத்தடி என்னும் இடத்தைச் சேர்ந்தவரும் மில்க்வைற் தொழிலகத்தில் வேலைபார்ப்பவருமான சின்னப்பு இராசேந்திரம் அவர்களும், சுதுமலை தெற்கு விளாத்தியடி கந்தையா இராசபூபதி அவர்களும் 3-6-81 புதன்கிழமை சுதுமலை புனித யூதாததேயு ஆலயத்தில் திருமணஞ்செய்து இல்லறமேற்றுள்ள வைபவத்தில் எங்கள் இதயபூர்வமான மங்கள நல்வாழ்த்தைக் கூறி மணமக்களை ஆசீர்வதிக்கிறோம்.

எங்கள்  வாழ்த்து

## மில்க்வைற் திருமணம் மற்றொன்று

வட்டுக்கோட்டை கல்லூரி ஒழுங்கையைச் சேர்ந்த முருகேசு பத்மநாதன் அவர்கள், அராலி மேற்கைச் சேர்ந்த அருணாசலம் தம்பதிகளின் புதல்வி பாக்கியலட்சுமி அவர்களை 11-7-81 சனிக்கிழமை திருமணஞ் செய்தார். மணமக்கள் எல்லாப் பேறுகளும் பெற்று இனிது வாழுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மாவட்ட . . . .**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் வரலாறு எழுதப் புகுந்தவர்கள் அவ்வரலாறு எண்பது வீதம் யாழ்ப்பாணப் புலவர்கள் வரலாறு என்பதை நன்கறிவர். யாழ்ப்பாணத்தவர் தமிழகம் எங்கும் சென்று பரவிச் செந்தமிழ்ப் பரிபாலனஞ் செய்த சிறப்பினை ஆயிரமாயிரம் பக்கங்களில் எழுதலாம். அந்தப் பெருமையை நாம் மறந்தோமாயின் அதனை மறுப்பதற்கும் மறைப்பதற்கும் பலர் உருவாகி விடுவார்கள். அந்தப் பெருமையை நாம் மறந்தால் நன்றி மறந்தவர்களாய் உய்வின்றி நடைப்பிணங்களாய் உலவவேண்டிவரும்.

சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தவர் பலர் தமிழ் நாட்டில் சீரும் சிறப்பும் பெற்றுப் பண்டிதமணிகளாய், வித்வசிரோமணிகளாய், மகாவித்துவான்களாய், சைவப்பெரியார்களாய், மாயாவாத தும்சகோளரிகளாய், இலக்கணக் கொத்தர்களாய், தருக்க கோடரிகளாய், சித்தாந்தசரபங்களாய், சைவோத்தாரணர்களாய், நாவலர்களாய்ப் புகழ் பெற்றிருந்தார்கள்.

இந்தியாவின் ஆதீனங்கள் மடங்களிலும் பாடசாலைகள் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களிலும், பதிப்பகங்களிலும் அரசாங்கத் திணைக்களங்களிலும், சுதேச மன்னர் சமஸ்தானங்களிலும் யாழ்ப்பாணத் தமிழர் செய்த பங்களிப்புப் பெரிது. நூலாசிரியர்களாய், உரையாசிரியர்களாய், பத்திராசிரியர்களாய் பதவி வகித்துப் பெரும் புகழ் பெற்ற யாழ்ப்பாணத்தார் மிகப் பலர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் யாழ்ப்பாணத் தமிழர் உயர்ந்தவர்கள்: போக்குவரத்து வசதிகள், தபால் தந்தித் தொடர்பு வசதிகள், சுகாதார வசதிகள், குறைவாக இருந்தமையையும் பொருட்படுத்தாது, வசதி வாய்ப்புக் குறைந்த சுற்றுடல் சூழலில் நிறைந்த மனத்தோடு பகீரதப் பிரயத்தனம் போன்ற பெரிய சேவைப்பணி செய்தவர்கள் நம்மவர்கள்.

இருபதாம் நூற்றாண்டில் எண்பதாண்டுகள் மறைந்து விட்டன. இன்னும் இருபதாண்டுகள் எஞ்சியுள்ள காலத்தில் நாம் முழுமூச்சாகப் பணிபுரிந்தாலன்றி இருபத்தொராம் நூற்றாண்டினர் எம்மை மதிக்கமாட்டார்கள். நாம் எமக்காக இல்லாவிட்டாலும் எம் சந்ததியினருக்காகவாகுதல் மிகுந்த தமிழ்ப்பணி புரிதல் வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலிருந்த தமிழ்ச் சங்கம், அதன் பின்னரெழுந்த செந்தமிழ்ப் பரிபாலன சங்கம், ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கம், கலாநிலையம், காவியபாடசாலை யாவும் செயலற்று ஒளி மங்கிவிட்டன. எமது தேவைகள் பல. நாம் தமிழையும் ஆங்கிலம், வடமொழி, சிங்களம் ஆகிய மொழிகளையும் நன்கறிதல் வேண்டும். தமிழைப் பொறுத்த அளவில் அதன் ஐந்திலக்கணங்களையும் அமைவாக அறிந்துகொள்ளுதல் வேண்டும். தொகுதிகள் தோறும் தமிழ்ச் சங்கங்கள் தோன்றித் தலைமைச் சங்கம் ஒன்றோடு இணைந்து செயலாற்றுதல் வேண்டும். நல்லூர்க் கல்யாணமண்டபத்திலோ, அன்றிச் சங்கிலி மன்னன் சிலைக்கு அருகில் உள்ள முத்திரைச் சந்தை வளவில் ஒரு மண்டபம் அமைத்து அதிலோ தலைமைச் சங்கத்தை நடத்தலாம்.

(தொடரும்)

### அன்று நடைபெற்ற
## சைவபுராண பிரவேச பரீட்சை

சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம் 1916ம் ஆண்டில் நடத்திய பரீட்சைக்குப் பாடநூல்களாக விதிக்கப் பெற்றவை ஆறுமுக நாவலர் அவர்களின் பெரியபுராண வசனம். திருவிளையாடற்புராண வசனம், கந்தபுராண வசனம் என்பனவும் இன்னும் தேவாரப் பதிகங்கள் திருவாசகம் என்பனவும், திருவருட்பயனுமாம்.

## ப்ரஹ்ம வித்யா பரிபாலக

யாழ்ப்பாணம் நீராவியடி கடைச்சாமியார் வீதியில் நடைபெறும் சிவானந்த குருகுல வித்வத் சபையினர், தொழிலதிபர் க. கனகராசா அவர்களின் சமயத் தொண்டினைப் பாராட்டி அவருக்குப் ''ப்ரஹ்ம வித்யா பரிபாலக'' BRAHMA VIDYA PARIPALAKA என்னும் விருதை வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

★ பிறர் செய்யுந் தீங்கு எம் சொந்த வினைப்பயன் ★

மில்க்வைற்
உற்பத்திப் பொருட்களுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிகளுக்கே
உதவுகிறது.





(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தார்மிக . . . .

தனுக்குப் பின் சாருமதியையும் இலங்கைக்கு அனுப்பினார். சாருமதி தர்மம் பரப்புவதற்காகச் சங்கமித்தை ஆயினாள். சங்கமித்தை யாழ்ப்பாணத்துக்கூடாகவே அநுரதபுரஞ் சென்றாள். புத்தபகவான் தியானஞ் செய்த அரசமரம் உலகப் புகழ் பெற்றது. அதிலிருந்து பதிவைத்து வந்த கொம்பர் ஒன்று அநுரதபுரத்தில் நாட்டப் பெற்றது.

புத்த தர்மத்தைக் கேட்டவர்களும், அரசமரத்தை அறிந்தவர்களும் வடஇந்தியாவில் காயாவுக்குச் செல்வதற்கு யாழ்ப்பாணத்துக்கூடாகவே வழிகண்டு கீரிமலையில் தீர்த்தமாடி அருகிலுள்ள காங்கேயன்துறைமுகத்தில் தோணி ஏறினார்கள். காங்கேயன்துறைக்கு அக்காலத்தில் காயாத்துறை என்று பெயர். பின்னர் மாவிட்டபுரத்துக்குக் காங்கேயன் திருவுருவம் வந்திறங்கியதால் அது காங்கேயன்துறை எனப் பெயர் பெறுவதாயிற்று.

அறப்பாதையில் திரும்பிய அசோகர்உள்ளத்தில் அன்பும் கருணையும் பொங்கி நாடெங்கும் பரந்தோடியது. தர்ம முரசு ஒலித்தது. தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடைபெற்றது. ஒழுக்கம் நிறைந்த உயர்ந்த வாழ்வு வாழுமாறு வழிவகுக்கப் பெற்றது.

யாவரும் உடல்வருந்தி உழைத்தார்கள். இளைஞர் பெற்றோரையும் ஆசிரியரையும் பணிந்து நடந்தார்கள். அநுரதபுரவாசிகளும் நல்லவர்களானார்கள். அவர்கள் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கூடாக இந்தியா போன போது தமிழரசர்கள், தமிழர் அவர்களுக்கு எல்லா உதவியுஞ் செய்தார்கள். வழியெங்கும் நிழல் மரங்கள் கனி மரங்கள் நாட்டினார்கள். கிணறுகள் மடங்கள் சுமைதாங்கிகள் அமைத்தார்கள். வயிறு நிறைய உணவு கொடுத்தார்கள். உண்டுறங்க வசதிகள் செய்தார்கள். அவர்களுக்கு விருப்பமான அரசமரங்களை அதிகமாக எங்கும் நாட்டி வழியனுப்பினார்கள். தர்மசக்கரம் உருண்டது. தார்மிக அரசு தழைத்தது. இது பழங்கதையானாலும் நம்மவருக்குப் புத்திபுகட்டக் கூடியது.

## பனம் விதைகள் தாருங்கள்

வழக்கம்போல் எமக்கும் பல்லாயிரக்கணக்கான பனம் விதைகள் தேவை. நாம் நம் சொந்தப் பொறுப்பில் அவற்றை வரண்ட பிரதேசங்கள் எங்கும் எம்கையாலேயே நாட்டுவோம். பாடசாலைப் பிள்ளைகள், சனசமூக நிலையத் தொண்டர்களுக்கு விதம் விதமான ஊக்குவிப்புப் பரிசில்கள் நாம் தருவதை மீண்டும் நினைவுபடுத்துகிறோம். பனம் விதை தாருங்கள். பனையை வளர்த்துப் பயனைப் பெறுவோம். பனை எங்கள் பண்பாட்டு மரம்.

## வேப்பம் விதை தேவை

மில்க்வைற் தொழிலகத்திற்கு ஏராளமான வேப்பம் விதைகள் தேவை. பெருந்தொகையாகத் தருபவர்களுக்கு நல்ல விலை கொடுப்பதோடு பரிசுப்பொருள்களும் கொடுக்கப்பெறும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**மில்க்வைற் தொழிலகம்**
**தபாற்பெட்டி இல. 77,**
**யாழ்ப்பாணம்.**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## குளப்பொருக்கு

விளைநிலத்துக்குப் பசளையாக இடுதல்வேண்டும். ஒரு செயலில் இரட்டைப்பயன் கிடைக்கும். குளப்பொருக்கு எடுத்து எடுத்துக் குளத்தை ஆழமாக்க விரும்பும் மாவட்டவாசிகள் தமக்குத் தேவையான மண்வெட்டி, தாச்சிச் சட்டி இரவலாக மில்க்வைற் தொழிலதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம். குளம் ஆழமாக்கும் பணி திருவிழாப்போல ஊரவரின் ஒத்துதவியுடன் நடைபெறுதல் நன்று.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-8-81.